

ஈரோடு மாவட்டம் பெருந்துறை வட்டம் செட்டிதோப்பு பகுதியில் நெடுஞ்சாலை துறையின் சார்பில் 8.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஈரோடு பெருந்துறை காங்கேயம் சாலை மேம்பாடு செய்யும் பணியினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை, மதுவிலக்கு ஆயத்தீர்வை துறை அமைச்சர் சு.முத்துசாமி துவக்கி வைத்தார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, பெருந்துறை தெற்கு ஒன்றிய கழக செயலாளர் கே.பி.சாமி, ஒ.சி.வி.ராஜேந்திரன், அகரம் மூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## செம்பரம்பாக்கம் ஏரியில் 100 கனஅடி உபரி நீர் திறப்பு!

சென்னை, அக்.9 -

செம்பரம்பாக்கம் ஏரியில் இருந்து நேற்று காலை 10 மணியளவில் 100 கனஅடி உபரி நீர் திறக்க பொதுப்பணித்துறை அதிகாரிகள் முடிவு செய்தனர்.

உபரிநீர் திறந்துள்ளதால் சிறுகளத்தூர், காவனூர், குன்றத்தூர். திருமுடி வாக்கம், வழுதியம்பேடு, திருநீர்மலை மற்றும் அடையாறு ஆற்றின் கரையின் இரு புறமும் உள்ள தாழ்வான பகுதிகளில் வசிப்பவர் களை எச்சரிக்கையாக இருக்குமாறு காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் கலைச்செல்வி மோகன் தெரிவித்துள்ளார்.

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி கூட்ட தீர்மானங்களை விளக்கி சிறப்புரை!

தஞ்சாவூர், அக். 9 -

தஞ்சை வடக்கு மாவட்ட செயற்குழுக் கூட்டம் 05.10.2023 வியாழக்கிழமை மாலை மாவட்டக் கழக அலுவலகத்தில் அவைத்தலைவர் க.நசீர் முகமது தலைமையில் நடைபெற்றது.

செ.இராமலிங்கம் எம்.பி, சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, கோவி. செழியன் எம்.எல்.ஏ ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி மாவட்டக் கழகச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி சிறப்பரையாற்றினார்.

கூட்டத்தில் மாவட்டக் கழக நிர்வாகிகள் கோ.வி. அய்யாராசு, ஜெயலெட்சுமி நடராஜன், சாஸ்தா நடராஜன், கும்பகோணம் மாநகர செயலாளர் சு.ப. தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி மற்றும் ஒன்றிய, பகுதி மற்றும் பேரூர்க் கழகச் செயலாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :

கூட்டுறவு சங்கங்களுக்கு பொது பேரவை கூட்ட அறிவிப்பு வெளியிடப்பட்டு 06.10.2023 முதல் 12.10.2023 வரை கூட்டம் நடைபெறவுள்ளது என்பதை அந்தந்த கூட்டுறவு சங்கங்களின் செயலாளர்கள் நாளிதழ் அறிவிப்பு செய்துள்ளார்கள். அதில் சங்க உறுப்பினர்கள் ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டையுடன் சங்க உறுப்பினர் கணக்கை இணைந்திடவும் மற்றும் ஏற்கனவே பழைய உறுப்பினர்கள் பங்குத்தொகை 10 ரூபாயாக உள்ளதை உடனடியாக ரூ.100 செலுத்தி புதுப்பித்துக்கொள்ள வேண்டும் என்றும் மற்றும் கூட்டுறவு சங்கங்களில் என்ன நோக்கத்திற்காக உறுப்பினர்கள் சேர்த்து உள்ளனர்கள் என்றும் அந்த நோக்கங்கள், எண்ணங்கள் மாறுபாடு உள்ளவர்களை கண்டறிந்து நீக்கிடவும், கூட்டுறவு சங்க செயலாளர்கள் தயாரிக்கப்படும் பட்டியல் 1.தகுதியற்றவர் பட்டியல், 2.இறந்தவர்கள் பட்டியல், 3.தகுதியான உறுப்பினர் பட்டியல் ஆகியவற்றை ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் முழுமையாக பார்வையிட்டு, அதனை பெற்று கூட்டுறவு சங்க தேர்தலுக்கு தயார்படுத்தி கொள்ள இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கழக இளைஞர் அணி செயலாளர், விளையாட்டு மேம்பாட்டு துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாள் விழா 27.11.2023 அன்று நடைபெற உள்ளதால் அன்றைய தினம் ஏழை எளியோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியும், முதியோர் இல்லங்களில் அறுசுவை உணவுகள் வழங்கியும்மற்றும்இளைஞர்களை ஊக்குவிக்கும் வகையில் விளையாட்டு போட்டிகள் நடத்தியும், ரத்ததானம் வழங்கியும், ஏழை மாணவ மாணவிகளுக்கு இலவச நோட்டு புத்தகங்கள் வழங்கியும் மற்றும் தஞ்சை வடக்கு மாவட்ட முழுவதும் சுவர் விளம்பரங்கள் செய்தும், இனிப்புகள் வழங்கி கொடியேற்றி சிறப்பிப்பது என்று இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

அக்டோபர்14ல் தமிழின தலைவர் கலைஞர் நூற்றாண்டையொட்டி சென்னையில் மகளிர் உரிமை மாநாடு நடைபெற உள்ளது. அனைத்து துறையிலும் பெண்களின் முன்னேற்றத்திற்காகவும், பெண்ணுரிமைக்காகவும், பெண்களுக்கான சொத்துரிமை, அரசு வேலை வாய்ப்பு உள்ளாட்சி தேர்தலில் பெண்களுக்கு 33% சதவித இடஒதுக்கீடு வழங்கிய தலைவர் கலைஞர் அவர்கள் நூற்றாண்டு விழாவில் நினைவு கூறும் வகையிலும் மற்றும் நம்முடைய கழக தலைவர் தளபதி அவர்கள் மகளிர்க்கு உரிமை தொகை வழங்கி மகளிர் வாழ்வில் முன்னேற்றத்தை ஏற்படுத்தியதை பாராட்டும் வகையில் மகளிர் உரிமை மாநாட்டில் கழக தலைவர் தளபதி அவர்கள் மற்றும் இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர் சோனியாகாந்தி, பிரியங்காகாந்தி, இந்தியா கூட்டணி மகளிர் தலைவர்கள் மற்றும் கனிமொழி கருணாநிதி MP பங்கேற்று சிறப்புரையாற்ற உள்ளதால் மாநாட்டில் பெண்கள் அதிக அளவில் பங்கேற்பது என்று தீர்மானிக்கப்படுகிறது.

தஞ்சை வடக்கு மாவட்டத்தில் அம்மாபேட்டை, பாபநாசம், கும்பகோணம், திருவிடைமருதூர், திருப்பனந்தாள் ஆகிய ஒன்றியங்களில் வருகிற 16.10.2023 மற்றும் 17.10.2023 இல் ஊராட்சி ஒன்றியத்தால் கட்டப்பட்ட புதிய பள்ளி வகுப்பறைகள் மற்றும் ஊராட்சி மன்ற கட்டிடம், அங்கன்வாடி மையக் கட்டிடம் ஆகியவற்றை தஞ்சை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பள்ளி கல்வி துறை அமைச்சருமான அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்து கொண்டு திறந்து வைக்க உள்ளார்கள். அதில் ஒன்றிய, நகர, பேரூர், கழக, கிளை கழக செயலாளர்கள், கழக தோழர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுமாய் இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்த்தல், நீக்குதல், முகவரி மாற்றம் செய்ய இந்திய தேர்தல் ஆணையத்தால் அறிவிக்கப்பட்டுள்ள சிறப்பு முகாமில் 01.01.2024 முதல் 01.04.2024, 01.07.2024, 01.10.2024 ஆகிய தேதிகளில் 18 வயதை பூர்த்தி அடைபவர்களும் படிவம் 6ஐ பயன்படுத்தி புதிய வாக்காளராக சேர்த்து கொள்ளவும் மற்றும் வருகிற நவம்பர் மாதம் 04, 05, 18, 19ம் தேதிகளில நடைபெறும் சிறப்பு முகாம்களில் BLA2 மற்றும் பாகமுகவர்கள் கழக தோழர்கள் பங்கேற்று புதிய வாக்காளர்கள் சேர்த்தும் இறந்தவர்கள் பட்டியல் தயாரித்து நீக்கிடவும், முகாமை பயன்படுத்திகொள்ள வேண்டுமாய் இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

வாக்காளர் சேர்த்தல், நீக்கல் முகாம்களை ஊராட்சி வாரியாக, வார்டு வாரியாக ஆய்வு செய்ய மாவட்ட கழகத்தின் மூலம் மாவட்ட கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணி அமைப்பாளர்கள், தலைவர்கள், துணைத் தலைவர்கள், துணை அமைப்பாளர்கள் ஆகியோர் கொண்ட குழு மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதிகளில் ஊர்கிளை, வார்டு கழகம், வாக்குச்சாவடி நிலைய முகவர்கள், தேர்தல் பணிகளில் முழுமையாக ஈடுபட உதவிபுரிவதற்கும், பட்டியல் ஆய்வு பணிகள் மேற்கொள்ளவும், வாக்காளர் சிறப்பு முகாம்கள், தஞ்சை வடக்கு மாவட்ட கழகத்தின் மூலம் நியமனம் செய்யப்பட்டுள்ளார்கள். அந்த பட்டியலில் நியமனம் செய்த நபர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட இடங்களில் பணி மேற்கொள்ள அந்தந்த மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி செயலாளர்களை தொடர்புகொண்டு அவர்களுடன் இணைந்து செயல்படுவதுடன், அந்த இடங்களில் தாங்கள் மேற்கொண்ட பணிகள் குறித்தும், மேற்கொண்ட நடவடிக்கைகளையும், தலைமை கழகத்திற்கு வழங்குவதற்கு ஏதுவாக மாவட்ட கழக அலுவலகத்திற்கு பட்டியல் தயார் செய்து தர மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி கழக செயலாளர்கள் தாங்கள் பெற்றுக்கொண்டு வாக்காளர் சேர்த்தல், நீக்கலை முழுமையாக பூத் வாரியாக ஆய்வு செய்து பணி செய்திட இந்தகூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

வருகிற 17.12.2023 அன்று சேலத்தில் நடைபெற இருக்கிற இளைஞர்கள் அணியின் மாநாட்டில் தஞ்சை வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பில் அதிக அளவில் இளைஞர்களை பங்கேற்க செய்து சிறப்பிப்பது என்றும், ஊராட்சி வாரியாக எவ்வளவு இளைஞர்கள் பங்கேற்பார்கள் என்ற விபரத்தை மாநரக, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள், மாவட்ட கழகத்திடம் தெரியப்படுத்த வேண்டுமாய் இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.



நாகை மாவட்டம் தலைஞாயிறு ஒன்றியம் வெள்ளப்பள்ளம் அரசு மேல்நிலைப் பள்ளியில் நாகை மாவட்ட சுற்றுசூழல் அணி சார்பில் நடைபெற்ற விழாவில் 1000 மரக்கன்றுகள் நடும் நிகழ்ச்சியில் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத்தலைவர் என்.கௌதமன் மரக்கன்றுகளை நட்டு தொடங்கி வைத்தார். உடன் ஒன்றியக் கழகச் செயலாளர்கள்மகா குமார், என்.சதாசிவம், நகரக் கழக செயலாளர்கள் இரா.மாரிமுத்து, மா.மீ. புகழேந்தி,மாவட்ட சுற்றுசூழல் அணி அமைப்பாளர் க.சத்தியமூர்த்தி, தலைவர் ஏ.எஸ்.என்.ராஜா, துணைத்தலைவர் ஆர்.அசோக்கும, துணை அமைப்பாளர்கள் கி.அன்புமணி, ப.கார்த்திகேயன், ர.முகுந்தன், வி.திருக்குமரன், ச. பாலா, இரா.ஆண்டிச்சாமி, ரா.பார்த்திபன், பாரதி அசோக்குமார், மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர் எஸ். வி.டி.அருள் மற்றும் பலர் உள்ளனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆரணி கோ. வெற்றிவீரன்

### அக்டோபர் 9 (2019)



1954ல் ஆரணி பேரூர்க் கழகம் துவங்கப்பட்டபோது, கழகத்தில் இணைந்து கழகப் பணியாற்ற துவங்கினார்.

மாவட்ட பிரதிநிதி, பொதுக்குழு உறுப்பினர், மாநில இலக்கிய அணி துணைச் செயலாளர் என பொறுப்புகள் வகித்தவர்.

'நம்நாடு' இதழில் துணை ஆசிரியராக பணியாற்றியதோடு, முரசொலியில் தொடர்ந்து கட்டுரைகள் எழுதியவர்.

கருப்புக் கொடி போராட்டம், கைலாசம் கமிஷன் எரிப்பு, இந்தி திணிப்பு எதிர்ப்பு, இலங்கைத் தமிழர் ஆதரவு போராட்டம் என தலைமை அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# திண்டிவனத்தில் 60 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதியதாக கட்டிடம்!

## அமைச்சர் செஞ்சி மஸ்தான் ஆய்வு !

திண்டிவனம், அக். 9 -

தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் அவர்கள் விழுப்புரம் மாவட்டம் திண்டிவனம் அரசு மருத்துவமனையை மாவட்ட அரசு தலைமை மருத்துவமனையாக தரம் உயர்த்தி அறிவிக்கப்பட்டதை அடுத்து திண்டிவனம் அரசு மருத்துவமனை வளாகத்தில் ரூபாய் 60 கோடி மதிப்பீட்டில் மாவட்ட அரசு தலைமை மருத்துவமனை கட்டிடம் கட்டப்பட்டு வருகிறது.

இப்பணியை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அப்போது பணியை தரமாகவும், விரைவாகவும் முடிக்க வேண்டும் என அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக திண்டிவனம் அரசு மருத்துவமனையில்செயல்படும், மருந்தகம், புறநோயாளிகள் பிரிவு உள்ளிட்ட பகுதிகளில் அமைச்சர் செஞ்சி மஸ்தான் நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார்.

அப்போது மருத்துவமனைக்கு வருகை தந்த புறநோயாளிகளிடம் அமைச்சர் செஞ்சி மஸ்தான் குறைகளை கேட்டு அறிந்தார்.

நிகழ்ச்சியில் பொதுப்பணித்துறை செயற் பொறியாளர் பருதி,திண்டிவனம் நகர மன்ற தலைவர் நிர்மலா ரவிச்சந்திரன், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், பொருளாளர் ரமணன், நகர செயலாளர் கண்ணன், பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் கணேசன்,திண்டிவனம் அரசு மருத்துவமனை தலைமை மருத்துவர்கள் சாந்தகுமாரி, ரவிச்சந்திரன், கார்த்திகா ஸ்ரீ உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

### கலைஞர் நூற்றாண்டு விழாவையொட்டி நாடாளுமன்ற தேர்தல் வரை

### திராவிட மாடல் அரசின் சாதனைகளை மக்களிடம் விளக்கிட

# காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் வாரியாக தொடர் பொதுக் கூட்டங்கள்!

## மாவட்ட செயலாளர் – அமைச்சர் தா.மோ.அன்பரசன் அறிவிப்பு!



தமிழகத்திற்கும் கழகத்திற்கும் கவசமாய் திகழ்ந்து மறைந்தும் - மறையாமல் நம் நெஞ்சங்களில் நீங்கா இடம் பெற்றுள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவையொட்டி - அவர் தமிழினத்திற்காகவும் - தமிழ்நாட்டு மக்களுக்காவும் ஆற்றிய அரும்பெரும் சாதனைகளை விளக்கியும் -

தமிழ்நாட்டின் முதல்வராக பொறுப்பேற்று மக்கள் மனம் மகிழும் வகையில் திராவிட மாடல் ஆட்சி நடத்தி இந்தியாவின் No.1 முதல்வர் என்ற பெருமைமிகு சாதனையை படைத்து, இரண்டரை ஆண்டு ஆட்சியில் எண்ணிலடங்கா திட்டப் பணிகளை நிறைவேற்றி சாதனை படைத்த சரித்திரத் தலைவர் தளபதி அவர்களின் தலைமையிலான மக்கள் நலன் காக்கும் கழக அரசின் சாதனைகளை விளக்கியும்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டத்தில் உள்ள பகுதி- ஒன்றிய - நகர - பேரூர்களில் மக்கள் கூடும் முக்கிய இடங்களில் வருகிற 21.10.2023, 22.10.2023, 28.10.2023, 29.10.2023 ஆகிய தேதிகளில் சனி, ஞாயிற்று கிழமைகளில் கீழ்க்கண்ட பகுதி- ஒன்றிய - நகர - பேரூர்களில் கீழ்க்காணும் விவரப்படி தொடர் பொதுக் கூட்டங்கள் நடைபெற உள்ளது.

**நாள் : 21.10.2023 (சனி) – நேரம்: மாலை 5 மணி**

| பகுதி – ஒன்றிய – நகர – பேரூர் | உரையாற்றும் பேச்சாளர் |
|---|---|
| காட்டாங்குளத்தூர் வடக்கு ஒன்றியம் | முனைவர் கோவி.செழியன், எம்.எல்.ஏ. |
| பல்லாவரம் வடக்கு பகுதி | பவானி கண்ணன் |
| காட்டாங்களத்தூர் தெற்கு ஒன்றியம் | கரூர் முரளி |
| திருப்போரூர் வடக்கு ஒன்றியம் | குத்தாலம் அன்பழகன் |
| செங்கல்பட்டு நகரம் | போடி காமராஜ் |
| திருப்பெரும்புதூர் வடக்கு ஒன்றியம் | தூத்துக்குடி சரத்பாலா |
| திருக்கழுக்குன்றம் பேரூர் | முனைவர் சபாபதி மோகன் |

**நாள் : 22.10.2023 (ஞாயிறு) – நேரம்: மாலை 5 மணி**

| பகுதி – ஒன்றிய – நகர – பேரூர் | உரையாற்றும் பேச்சாளர் |
|---|---|
| மாங்காடு நகரம் | ஈரோடு இறைவன் |
| பம்மல் தெற்கு பகுதி | முனைவர் சபாபதி மோகன் |
| திருப்போரூர் பேரூர் | பவானி கண்ணன் |
| திருப்பெரும்புதூர் தெற்கு ஒன்றியம் | தூத்துக்குடி சரத்பாலா |
| பல்லாவரம் தெற்கு பகுதி | போடி காமராஜ் |
| புனிததோமையர் மலை வடக்கு ஒன்றியம் | கரூர் முரளி |
| மறைமலை நகர் நகரம் | குத்தாலம் அன்பழகன் |

**நாள் : 24.10.2023 (புதன்) – நேரம்: மாலை 5 மணி**

| பகுதி – ஒன்றிய – நகர – பேரூர் | உரையாற்றும் பேச்சாளர் |
|---|---|
| ஆலந்தூர் தெற்கு பகுதி | சைதை சாதிக் |

**நாள் : 25.10.2023 (வியாழன்) – நேரம்: மாலை 5 மணி**

| பகுதி – ஒன்றிய – நகர – பேரூர் | உரையாற்றும் பேச்சாளர் |
|---|---|
| குன்றத்தூர் வடக்கு ஒன்றியம் | முனைவர் கோவி.செழியன், எம்.எல்.ஏ. |

**நாள் : 26.10.2023 (வெள்ளி) – நேரம்: மாலை 5 மணி**

| பகுதி – ஒன்றிய – நகர – பேரூர் | உரையாற்றும் பேச்சாளர் |
|---|---|
| ஆலந்தூர் வடக்கு பகுதி | ஈரோடு இறைவன் |

**நாள் : 28.10.2023 (சனி) – நேரம்: மாலை 5 மணி**

| பகுதி – ஒன்றிய – நகர – பேரூர் | உரையாற்றும் பேச்சாளர் |
|---|---|
| குன்றத்தூர் நகரம் | குடியாத்தம் புவியரசி |
| திருப்போரூர் தெற்கு ஒன்றியம் | நாகம்மை கருப்பையா |
| பம்மல் வடக்கு பகுதி | ஆரணி மாலா |
| தாம்பரம் கிழக்கு பகுதி | சேலம் சுஜாதா |
| செம்பாக்கம் வடக்கு பகுதி | கந்திலி கரிகாலன் |
| நந்திவரம் கூடுவாஞ்சேரி நகரம் | அத்திப்பட்டு சாம்ராஜ் |

**நாள் : 29.10.2023 (ஞாயிறு) – நேரம்: மாலை 5 மணி**

| பகுதி – ஒன்றிய – நகர – பேரூர் | உரையாற்றும் பேச்சாளர் |
|---|---|
| செம்பாக்கம் தெற்கு பகுதி | சேலம் சுஜாதா |
| திருக்கழுக்குன்றம் வடக்கு ஒன்றியம் | கந்திலி கரிகாலன் |
| பெருங்களத்தூர் தெற்கு பகுதி | ஆரணி மாலா |
| குன்றத்தூர் தெற்கு ஒன்றியம் | சைதை சாதிக் |
| திருப்பெரும்புதூர் பேரூர் | அத்திப்பட்டு சாம்ராஜ் |
| மாமல்லபுரம் நகரம் | சேப்பாக்கம் பிரபாகரன் |

**நாள் : 30.10.2023 (திங்கள்) – நேரம்: மாலை 5 மணி**

| பகுதி – ஒன்றிய – நகர – பேரூர் | உரையாற்றும் பேச்சாளர் |
|---|---|
| கண்டோன்மென்ட் நகரம் | குடியாத்தம் புவியரசி |

அறிவிக்கப்பட்டுள்ள இந்த பொதுக்கூட்டங்களை, அந்தந்த பகுதி - ஒன்றிய - நகர - பேரூர் கழகச் செயலாளர்கள் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து, உள்ளூரில் உள்ள கழகப் பேச்சாளர்களையும் இணைத்து, அழைப்பிதழில் கழக நிர்வாகிகளின் பெயர்களை விடுபடாமல் முறையாக துண்டு பிரசுரங்களை அச்சிட்டு,

அந்தந்த மாநகர பகுதி - ஒன்றிய - நகரங்களில் அடங்கிய நகர - பேரூர் - வட்டக் கழக நிர்வாகிகள் - இளைஞர் அணி - மாணவர் அணி - மகளிர் அணி உள்ளிட்ட கழக அணிகளின் நிர்வாகிகள் - வாக்குச்சாவடி தேர்தல் பணிக்குழு உறுப்பினர்கள் - உள்ளாட்சி மன்றப் பிரதிநிதிகள் மற்றும் கழக செயல் வீரர்கள் அனைவருக்கும் முறையாக தகவல் தந்து அவர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் பங்கேற்கச் செய்து,

எந்த நோக்கத்திற்காக இந்த தொடர் பொதுக் கூட்டங்கள் நடத்தப்பட உள்ளதோ, அந்த நோக்கத்தை நிறைவேற்றிடும் வகையில், முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் அன்புத் தலைவர் தளபதி அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள ஏழை - எளிய, தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட அடித்தட்டு மக்களுக்காக அவர்கள் ஆட்சியின் போது ஆற்றிய அரும் பெரும் சாதனைகளை மக்களிடம் கொண்டு சென்று சேர்த்திட, இப்பொதுக்கூட்டங்களை ஆடம்பரமின்றி - மிகவும் எளிமையான முறையில் - எழுச்சியுடன் நடத்திடும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**அமைச்சர் தா.மோ.அன்பரசன்**
செயலாளர், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட தி.மு.க.



அறந்தாங்கி கல்வி மாவட்டம் வெண்ணாவல்குடி அரசு மேல்நிலைப்பள்ளியில் மாணவர்கள் 64பேருக்கும் மாணவியர்கள் 48 பேருக்கும் ஆக மொத்தம் 112 பேருக்கு விலையில்லா மிதி வண்டியினை தமிழ்நாடு சுற்றுச்சூழல் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன் வழங்கியதுடன் பள்ளியின் உட்பகுதியில் மரக்கன்றுகளையும் நட்டு மாணவச் செல்வங்களுக்கு அறிவுரைகள் வழங்கி சிறப்பித்தார்கள். மாவட்ட கல்வி அலுவலர் திருமதி. ராஜேஸ்வரி தலைமையில் பெற்றோர் ஆசிரியர் கழக தலைவர் மணிமொழி மனோகரன் முன்னிலையில் பள்ளி தலைமையாசிரியர் சின்னத்தம்பி வரவேற்பில் நடைபெற்ற இந்நிகழ்வில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் சுப்புராமன், ஒன்றியச் செயலாளர் அரு.வடிவேலு, ஒன்றியக்குழு உறுப்பினர் பெரியசாமி, ஊராட்சி மன்றத்தலைவர் ராஜாங்கம், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினர் நாகேந்திரன், பெற்றோர் ஆசிரியர் கழக துணைத்தலைவார் முத்துவீரன், பள்ளி மேலாண்மைக்குழு உறுப்பினர் சதாசிவம் திருவரங்குளம் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், கழக நிர்வாகிகள்: ராஜபெரியண்ணன் , பரமசிவம் , பாலா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் மற்றும் இருபால் ஆசிரியப்பெருமக்கள் கலந்து கொண்டனர்.